-95-

-93-

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்
நாள் 18 ஜூலை 2005
C66031
சென்னை - 600 002

சுருக்கம்

கல்வித் தகுதிகள் - அண்ணாமலை திறந்த வெளிப் பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் பட்டப் படிப்புகள் - பல்கலைக் கழகத்தில் முறையாக வழங்கப்படும் பட்டப் படிப்புகளுக்கு இணையாகவும், வேலைவாய்ப்பிற்காகவும் அத்திறந்தவெளிப் பல்கலைக் கழகம் தமிழ்நாட்டில் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் நடைமுறைக்கு வருதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த (ஆர்) துறை

அர்சாணை (நிலை) எண்.87

நாள் : 11. 7 .2005

படிக்கப்பட்டது:

1. அரசாணை நிலை எண்.441, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை, நாள் 20.11.93.
2. அரசாணை நிலை எண்.216, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை, நாள் 26.8.97.
3. இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் கடித எண்.டி.1/2014/ 2003, நாள் 6.6.2003.
4. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலரின் கடித எண்.6401/ஆர்.என்.டி.எப்.1/2004 நாள் 10.9.2004.

........

ஆணை:

அண்ணாமலை திறந்தவெளி பல்கலை கழகத்தால்(Open University) வழங்கப்படும் பட்டப் படிப்பு, முதுநிலைப் பட்டப் படிப்பு மற்றும் பட்டயப் படிப்பு, அண்ணாமலை பல்கலைக் கழகத்தால் முறையாக (Regular Stream) வழங்கப்படும் பட்டப் படிப்பு, முதுநிலைப் பட்டப் படிப்பு மற்றும் பட்டயப் படிப்பிற்கு சமமாகக் கருதி பொதுப் பணிகளில் வேலைவாய்ப்பிற்கு அங்கீகாரம் அளித்து பார்வை 2–ல் உள்ள அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டது.

2. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர், மேற்காணும் பொருள் சம்பந்தமாக பார்வை மூன்றில் உள்ள தனது கடிதத்தில், நடைமுறையிலுள்ள விதிகளின்படி, அரசாணை அமலுக்கு வரும் நாள் குறிப்பிடப்படவில்லை என்றால், அரசாணை பிறப்பித்த நாள் முதற்கொண்டு அமலுக்கு வரும் என்றும், இதன் அடிப்படையில், மேற்படி அரசாணையில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு அவ்வரசாணை பிறப்பிக்கப்பட்ட நாளுக்கு முந்தைய காலங்களுக்கு பொருந்துமா என்பது குறித்து அரசின் தெளிவுரையைக் கேட்டிருந்தார்.

3. மேற்காணும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநரின் கருத்துரு, பார்வை ஒன்றில் உள்ள அரசாணையின்படி நியமிக்கப்பட்ட இணைக் கல்வி நிர்ணய பரிசீலிப்புக் குழுவின் பரிந்துரைக்காக வைக்கப்பட்டது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய அலுவலகத்தில் 2.9.2004 அன்று நடைபெற்ற 'மேற்படி குழுக் கூட்டத்தில்,

அண்ணாமலை திறந்த வெளிப் பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் பட்டப் படிப்புகள்,வேலை வாய்ப்பிற்காக அப்பல்கலைக் கழகத்தில் முறையாக வழங்கப்படும் பட்டப் படிப்புகளுக்கு இணையானவை என, அத்திறந்தவெளிப் பல்கலைக் கழகம் தமிழ்நாட்டில் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் நடைமுறைப்படுத்தலாம் என பரிந்துரைத்துள்ளது. எனவே, மேற்காணும் இணைக் கல்வி நிர்ணய பரிசீலிப்புக் குழுவின் பரிந்துரைமீது உரிய ஆணை வெளியிடுமாறு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் பார்வை நான்கில் உள்ள கடிதத்தில் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளது.

180001

4. இணைக் கல்வி நிர்ணய பரிசீலிப்புக் குழுவின் பரிந்துரையினை தீவிர பரிசீலனை செய்த பின்பு அதனை ஏற்றுக்கொள்ள அரசு முடிவெடுத்துள்ளது. அவ்வாறே, அண்ணாமலை திறந்த வெளிப் பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் பட்டப் படிப்புகள், வேலை வாய்ப்பிற்காக அப்பல்கலைக் கழகத்தில் முறையாக வழங்கப்படும் பட்டப் படிப்புகளுக்கு இணையானவை என, அத்திறந்தவெளிப் பல்கலைக் கழகம் தமிழ்நாட்டில் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் நடைமுறைப் படுத்த வேண்டும் என அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ச.சந்திரமௌலி
அரசு செயலாளர்

பெறுநர்
அனைத்துச் செயலர்கள், தலைமைச் செயலகம், சென்னை–9.
அனைத்துத் துறை தலைமை அலுவலர்கள்.
அனைத்துத் தலைமைச் செயலகத் துறைகள், சென்னை–9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அனைத்துப் பிரிவுகள்,, சென்னை–9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
பதிவாளர், அண்ணாமலை பல்கலைக் கழகம்,
அண்ணாமலை நகர்–608 002.
✓செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–2.

<u>நகல்:–</u>
உயர் கல்வித் துறை, சென்னை–9.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

[signature] 13.7.05
பிரிவு அலுவலர்

13/7/05

Subtd to S.O

Copies of G.O's may be transferred to APD-'A' to APD-'F' Sections and RND-'A' to RND-'D' Sections thro' Thappal Section.

10/8/05

10/8/05

Recieved.
10/8 (T.D)
S.O.
Thappal